தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2024 விடை (ஏப்—மே) விலை உருபா 1-50 (இதழ் எண்: 163)

பாவலரேறு ஐயா அவர்களுக்குக் கைவிலங்கிட்டு வழக்குமன்றம் அழைத்துவரக் காவலர்கள் வலியுறுத்தல்!

ஐம்பதுக்கும் மேற்பட்ட காவலர்களுக்கு நடுவில் 'ஒற்றைத் தமிழ்மகனாய்'ப் பாவலரேறு ஐயா வழக்கு மன்றம் வந்தார்!

ஐயாவைக் காண மெய்த்தமிழ் அன்பர்கள் மொய்த்தனர்!

Scanned with CamScanner

12-5-93 - நம் பாவலரேறு ஐயா அவர்களின் வழக்கு மன்ற வருகை நாள். கடந்த 27-1-93- அன்று ஐயா அவர்கள் 'தடா'க் கொடுஞ் சிறைக்குள் அடைக்கப்பட்டார்கள் 17-3-93- அன்று வழக்குமன்றம் அழைத்து வரப்பெற்ற ஐயா அவர்கள் மீண்டும் 12-5-93-அன்று அழைத்து வருமாறு 'தடா'ச் சிறப்பு வழக்கு மன்ற நடுவர் திரு. சௌந்திரபாண்டியன் கூறினார்.

அதற்கு முந்தைய நாள் 11-5-93 அன்று நம் ஐயா அவர்கள் கண் ஆய்வுக்காக, சென்னை—எழும்பூர் கண் மருத்துவமனைக்கு அழைத்து வரப் பெற்றார்கள்.

ஐயா அவர்கள் மருத்துவமனைக்குக் காலை 9.30 மணி அளவில் வருவதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பாகவே மருத்துவமனையின் வாயிற்புறத்தில் ஏராளமான காவலர்கள் குவிக்கப் பட்டனர். அவர்கள் மருத்துவமனைக்குள் நுழைபவர்களை எல்லாம் உசாவியபடியே இருந்தனர்.

அதேபொழுது—ஐயா அவர்கள் சென்னை நடுவண் சிறையைவிட்டு வெளியே வருவதைக் காண நின்றிருந்த அன்பர்களைக் காவலர்கள் உசாவியும், ஆய்வு செய்த பின்னருமே அங்கு நிற்க இசைந்தனர்.

8-30 மணி அளவிற்கு ஐயா அவர்கள் வெளியே வரவும், ஐயா அவர்களை அழைத்துப் போக வந்திருந்த கருவிப்படைக்(Armed Reserve)காவலர்கள்—ஐயா அவர்களுக்குக் கைவிலங்கு போட வந்தனா.

ஐயா அவர்கள் கைவிலங்கு போடுதல் கூடாது என்றும்; அப்படிப் போடப் பெறுமாயின் தாம் மருத்துவமனைக்கு வரமுடியாது—என்றும் உறுதியாகக் கூறினார்கள.

அதன் பின்னர்ச் செய்வதறியாது தயங்கியபடி இருபதுக்கும் மேற்பட்ட காவலர்கள் ஐயா அவர்களைச் சுற்றி வளைத்தபடி அழைத்து வந்து மூடுந்தில் ஏற்றினர். ஐயா அவர்களை அமர வைத்து அவரைச் சுற்றி அமர்ந்து கொண்டனர். ஏராளமான புது வகைக் கருவிகளை (Weapon)க் கொண்டு வந்து, மக்கள் அஞ்சும்படி நடந்து கொண்டனர்.

முதலில் ஒரு மிதியுந்தும்(motor-bike) அதன்பின் மூடுந்துப்(Van)அதைத் தொடர்ந்து மலையுந்தும்(jeep)—என வரிசையாகக் காவலர்கள் தொடர்ந்து வந்தனர்.

மூடுந்து—கண் மருத்துவமனைக்குள் நுழைகிற பொழுது காவலர்கள் அங்குச் சுற்றுவட்டாரங்களில் நிற்பவர்களையெல்லாம் விரட்டினர்.

ஐயா அவர்கள் மருத்துவமனைக்குள் அழைத்துச் செல்லப்பட்டார். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பெற்றவுடன்— மருத்துவமனையை அடைத்துவிட்டனர். வெளியே இருந்து யாரையும் உள் நுழைய மறுத்துவிட்டனர்.

ஐயா அவர்களின் துணைவியார் அவர்களும், புலவர் இறைக்குருவனார், இறை-பொற்கொடி மற்றும் அன்பர்கள் சிலர் மட்டும் மருத்துவ மனைக்குள் நுழைந்தும் அவர்களுடன் ஐயா அவர்கள் பேசுவதற்கு மறுத்துவிட்டனர் காவல் துறையினர்.

ஆனால் ஐயா அவர்களின் சிறப்புணர்ந்து மருத்துவர்கள் மிகவும் சிறப்பாக ஐயா அவர்களைக் கவனித்தது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர், சிறையிலிருந்து அழைத்து வரப்பெற்றது போலவே, ஐயா அவர்கள் மிக விரைவாகவும், பரபரப்பாகவும் மூடுந்தில் ஏற்றப் பட்டுச் சிறைக்குக் கொண்டு செல்லப் பெற்றார்கள்.

மறுநாள் 12-5-93—ஐயா அவர்கள் வழக்கு மன்ற வருகை நாள். முன்னதாக ஐயா அவர்களின் வருகையைக் குறித்தும், ஐயா அவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும் சுவரொட்டிகள் ஒட்டப் பெற்றன.

முந்தைய நாள் மருத்துவமனைக்கு ஐயா அவர்கள் அழைத்துச் செல்லப்பெற்ற போது காவல்துறை நடத்திய அதே தன்மையிலேயே ஐயாவைக் கை விலங்கு போடக் கட்டாயப் படுத்தினர்.

ஐயா உறுதியுடன் மறுத்தார். பின்னர்ப் பழைய படியே இருபதுக்கும் மேற்பட்ட காவலர்கள் ஐயாவை மூடுந்தில் ஏற்றிச் சிறப்பு வழக்கு மன்றத்திற்கு அழைத்து வந்தனர்.

வழக்கு மன்றத்தில் நம் பாவலரேறு...

வழக்கு மன்றத்தின் வெளியில் கூட அன்பர்கள் யாரையும் நிற்க விடவில்லை.

வழக்கு மன்றத்தைச் சுற்றிக் காவலர்கள் ஏராளமாய் நிறுத்தப்பட்டனர்.

வழக்கு மன்றத்தின் அனைத்து கதவுகளும் மூடப்பட்டன.

11-மணி அளவிற்கு ஐயா அவர்களின் மூடுந்து வந்தது. ஆனல நடுவர் வழக்கு மன்றத்திற்கு வராமல் அவர் அறையிலே இருந்ததால்—ஐயா அவர்கள் மூடுந்திலிருந்து வழக்கு மன்றத்திற்கு அழைத்து வரப்படாமல் வண்டியிலேயே அமர்த்தப் பெற்றிருந்தார்.

'ஒற்றைத் தமிழ் மகனாய்'...எந்த நிலையிலும் மற்றை இனத்தார்க்கு மண்டியிடாத அத் தமிழ் அரிமா அம் மூடுந்தில் தனித்து அமர்த்தப்பட்டிருக்கலாம், ஆனால் ஐயா அவர்களின் கருத்துகளும், கொள்கையும் உண்மைத் தமிழ் உள்ளங்களில் நெருப்பாய்க் கனன்று கொண்டிருக்கவே செய்தன.

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

உ.த.மு.க. நிறுவனர் ஐயா பாவலரேறு அவர்களை விடுதலை செய்யக் கோரிப் பல்வேறு செயல்பாடுகள்!

தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுதலை செய்யக்கோரி கையெழுத்தியக்கம்:

கடந்த 27-1-93-அன்று 'தடா' அடக்குமுறைச் சட்டத்தின் கீழ் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் தளை செய்யப் பெற்றது தெரிந்ததே.

தமிழ்நாடு விடுதலையைப் பற்றி எழுதியதற்காக அவர் 'தடா' சட்டத்தின் கீழ்த் தளை செய்யப் பட்டார்.

எந்த அரசியல் கட்சியையும் சாராமல் — தமிழ் மொழி, இன, நாட்டு உரிமைகள் பற்றியதான செய்திகளைக் கடந்த நாற்பதாண்டு காலமாக வெளிப்படுத்துவதும், அதற்கென ஏராளமான நூல்களை எழுதி வெளியிடுவதுமான பணி — தவிர — பிற எந்தவகை வன்முறைச் செயல்களிலும் தொடர்பில்லாத அவரை 'தடா'ச் சட்டத்தின் பிடியிலிருந்து உடனடியாக விடுதலை செய்யும்படி — அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டியக்கத்தில் உள்ள இருபத்து ஆறு அமைப்புகள் கோரிக்கை விட்டிருந்தன.

பெருஞ்சித்திரனாரை விடுதலை செய்யக்கோரி-ஒரு கையெழுத்தியக்கமும் மேற்கொள்ளபபட்டது.

பா.ம.க,நிறுவனர் மருத்துவர் (Dr.) ச.இராமதாசு, முன்னாள் அமைச்சர் வீ.வி.சுவாமிநாதன், க.சுப்பு, போன்ற அரசியல் தலைவர்களும, சாலை. இளந்திரையன், சுப.வீரபாண்டியன், பிரபஞ்சன், தியாகு, இன்குலாப், க.நகைமுகன், தராசு — சியாம் — போன்ற எழுத்தாளர்களும,

டி இராசேந்திரன், மன்சூர் அலிகான் — போன்ற திரைத் துறையினரும்,

வி.ஜி.சந்தோசம் — போன்ற தொழிலதிபரும், எசு.வி.இராசதுரை பி.வி. பக்தவத்சலம், கலைமணி, தி.இராமதாசு, — போன்ற மக்கள் உரிமைக்கான அமைப்பினரும், வழக்கறிஞர்களும், பெருஞ்சித்திரனாரை விடுதலை செய்யக் கோரி கையொப்பமிட்டனர்.

கையொப்பம் பெற்ற படிகள் — அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டியக்கத்தினரால் தமிழக முதல்வருக்கும் — தடா தனி வழககுமன்ற நடுவருக்கும அனுப்பி வைக்கப்பெற்றது.

கருத்துரிமையைப் பறிக்காதே! தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுதலை செய்! அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டியக்கம் — கண்டனப் பொதுக் கூட்டம்.

கடந்த 25-3-93 அன்று சென்னை தியாகராய நகர் பேருந்து நிலையம் அருகில் அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டியக்கத்தின் சார்பில் பாவலரேறு ஐயா அவர்கள் சிறைப்படுத்தப்பட்டதைக் கண்டித்தும், கருத்துரிமையைப் பறிக்கிற அரசின் செயலைக் கண்டித்தும் பொதுக் கூட்டம் நடத்தப் பெற்றது. இருபத்து ஆறு அமைப்புகள் சேர்ந்த கூட்டமைப்பே அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டமைப்பு. இக் கூட்டமைப்பின் கண்டனக் கூட்டத்தில் — பேரா.தீரன் (பா.ம.க.) சுப.வீரபாண்டியன் (விடுதலைக் குயில்கள்), தியாகு (திலீபன் மன்றம்), பத்மநாபன் (த.தே.பொ.கட்சி), பொழிலன் (த.ஒ.வி இயக்கம்) ஞானம் (ம ஒ.இ.கழகம்) வழககறிஞர் இராமதாசு (த.இ.வி.கழகம்), தீனன் (த.கு.கட்சி), செந்தில்நாதன்(த.ம. இயக்கம்)குன்னங்குடி அனியா (பா.ம.க.) மற்றும் பலர் ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களை விடுதலை செய்யக் கோரி முழங்கினர். தியாகு பேசுகையில் பாவலரேறு அவர்களின் சிறப்புப் பற்றி வெகுவாக எடுத்துக் கூறினார். பேரா.தீரன் பேசுகையில் ஐயா அவர்களை விடுதலை செய்யவில்லையெனில், பாசுட்டில் சிறை பிரான்சிலே உடைக்கப் பட்டது போன்று இங்கும் உடைக்கப்பட்டு ஐயா அவர்களை விடுதலை செய்வோம் என்றார். கண்டனக் கூட்டம் இரவு 2 30 மணி அளவில் முடிந்தது.

ஐயா அவர்களை விடுதலை செய்யச் சொல்லி சுவரொட்டி இயக்கம்:

ஐயா பெருஞ்சித்திரனாரும், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன் அவர்களும், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத் தோழர் பொழிலனும் கடந்த சனவரி 27-அன்று 'தடா'வில் சிறை செய்யப்பெற்ற பொழுதே பரவலாக அனைத்து அமைப்புகளும் கண்டனம் தெரிவித்து சுவரொட்டி ஒட்டின. உலகத் தமிழின முன்னேற்றக் கழகமும், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கமும், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியும் விடுதலைக் குயில்களும், திலீபன் மன்றமும் பரவலாக சுவரொட்டி அடித்து ஒட்டின. மதுரையில் தமிழர் தேசிய இயக்கமும, தமிழக மாணவர் இயக்கமும் சுவரொட்டி அடித்து ஒட்டின.

பின்னர் ஐயா பாவலரேறு அவர்கள் 17-3-93 அன்று வழக்கு மன்றம் அழைத்து வரப்பெற்ற பொழுதும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகமும, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கமும் நகரத்தில் சுவரொட்டி ஒட்டின.

ஐயா அவர்களை விடுதலை செய்யச் சொல்லி துண்டறிக்கை பரப்பல்:

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், தமிழர் தேசிய இயக்கம்,தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம் பார்க்க)

தமிழக மக்களின் அடிமைத்தனத்திற்கும் வறுமைக்கும் காரணம் என்ன?

—க.கண்ணன். அறி.இ. கரடிப்பட்டி,

முன்னுரை:

இந் நிலவுலகில் பல்வேறு படிநிலை வளர்ச்சிக்குப் பின் தோன்றிய மாந்த இனம், இவ்விடைக் காலத்தில் சிறு சிறு மொழித் தேசிய இனங்களாக மலர்ச்சியுற்று இருக்கின்றது. இத் தேசிய இனங்களின் அடுத்த கட்ட வளர்ச்சிக்குத் தடையாக அக நிலையிலும் புற நிலையிலும் உள்ளவற்றை உடைத்து நொறுக்கி மேலும் வளர்வதற்கு ஒவ்வொரு தேசிய இனமும் இடைவிடாது இயங்கிக் கொண்டே இருக்கின்றது. அவ்வகையில் தமிழர்களின் நீண்ட அடிமைத்தனத்திற்கும் சொல்லொண்ணு வறுமைக்கும் உரிய கரணியங்களை குமுக நிலையிலும் அரசியல் நிலையிலும் பொருளியல் நிலையிலும் நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

தமிழினத்தின் குமுக உறவுகளும் அடிமைத் தனமும்:

பல்வேறு இனக் குழுக்களாகத் தோன்றி அகமண முறைகளால் இறுக்கமாகிய பல்வேறு சாதிக் குழுக்கள் இன்னும் முழுமையாகச் சிதையாமல் அதற்கான மரபு வழிக் கருத்தியல்களோடும், குமுக ஒடுக்கு முறையையும் பொருளியல் சுரண்டலையும் கருவாகக் கொண்டும், பிரிந்தே இயங்குகின்றன. தமிழினம் முழுமையும் ஒரு சங்கிலித் தொடர்போல் எவ்வாறு அடிமை உணர்வுக்கு ஆட்படுகிறது என்பதை கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தலாம்.

ஒரு தனிக் குடும்பத்திலும் ஒட்டு மொத்த குமுக அமைப்பிலும் ஆணிற்குப் பெண் கீழாக மதிக்கப்படுகிறாள். தாழ்த்தப்பட்ட தமிழர்களுக்குள்ளேயே ஒரு சாதி இன்னொரு சாதிக்கு உயர்வு அல்லது தாழ்வு என்று எண்ணப்படுகிறது. பிற்படுத்தப்பட்ட சாதிக்குள்ளேயே எண்ணற்ற சாதிகள் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு கற்பித்துக் கொண்டு மோதிக் கொண்டுள்ளன. தாழ்த்தப்பட்ட சாதிகள் அனைத்தும் பிற்பட்ட சாதிகளுக்குக் கட்டுப்பட வேண்டுமென்ற அடககு முறை எண்ணம். முற்படுத்தப்பட்ட சாதிகள் தமிழகத்தில் சிலவாக இருந்தும், பெரும்பான்மையாகவுள்ள தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சாதிகள் அனைத்தும் தங்களுக்குக் கட்டுபட வேண்டுமென்ற ஆணவம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவரையொருவர் அடிமையாக்கிக் கொண்டு, எல்லாத் தமிழர்களும் தங்களுக்கு எந்த வகையிலும் குமுகத் தொடர்பில்லாத ஆரியப் பார்ப்பனர்களிடம் அடிமையாக இருக்கும் கொடுமை, தமிழர்களின் குடுமிகள் எல்லாம் மிகச் சிறுபான்மையாகவுள்ள பார்ப்பனர்களால் ஆட்டுவிக்கப்படும் கொடுமை தமிழ்கத்தின் இவ்வடிமைத் தனத்திற்கான கருத்தியல்கள் தொடர்ந்து இந்துமதப் புராணங்களாலும் வேதங்களாலும் கற்பிக்கப் பட்டும், இதை மீறுபவர்கள் தண்டிக்கப்பட்டும் வந்தனர். முதலாளித்துவ வளர்ச்சியால் இன்று இந் நிலையில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் தமிழினத்தின் அடிமைத் தனத்தின் இச் சங்கிலித் தொடரை நாம் இன்னும் முழுமையாக உணரவில்லை.

தமிழக மக்களின் அரசியல் அதிகாரம்:

தமிழர்களின் இச்சாதிய அடிமைத்தன உளவியல் உணர்வுகளே நம் அரசியல் அதிகாரத்தை குமுகப்படிநிலையில் மேலேயுள்ள ஆரியப்பார்ப்பனரிடமும் வட இந்தியத் தரகு முதலாளிகளிடமும் இழந்து விட்டுத் தொடர்ந்து அடிமையாக இருப்பதற்குரிய முதற் கரணியமாகும். ஏற்கனவே சாதியாலும் மதத்தாலும் எவ்வாறு பல நூறு ஆண்டுகள் ஒருவரையொருவர் அழுத்திக் கொண்டு மற்ற இனங்களின் மேலாளுமைக்கு ஆட்பட்டனரோ, அவ்வாறே இன்றும் தமிழக மக்களுக்கு எவ்வகையிலும் பயன்படாத பல்வேறு தரகு முதலாளிகளின் அரசியல் கட்சிகளாலும் தமிழக மக்கள் பிரிக்கப்பட்டு மேலும் மேலும் அடிமையாக்கப்படுகின்றனர். ஆட்டையும் ஆட்டையும் மோதவிட்டு நரி அரத்தம் குடித்த கதையாக நரித் தந்திரமுள்ள ஆரியப் பார்ப்பனர்களும் வட இந்தியத் தரகு முதலாளிகளும தமிழர்களின் அரத்தத்தைக் குடிக்கின்றனர். தமிழக மக்களின உரிமையை வடஇந்தியருக்குக் காட்டிக் கொடுப்பதில் பண்டைக்கால இராவணன் தம்பி வீடணர்களாகவும், இடைக்கால எட்டப்பர்களாகவும, இக்கால இராமமூர்த்திகளாகவும், சிதம்பரங்களாகவும், அனந்தன்களாகவும் ஒவ்வொரு அரசியல் கட்சித் தலைவர்களும் இயங்குகின்றனர்.

தமிழக மக்களின் வறுமைக்கான பொருளியல் காரணங்கள்:

தமிழக மக்களின் உழைப்பும் விளைவிப்புப் பொருள்களாகிய நெல், பருத்தி, கடலை, கரும்பு, தென்னை, வாழை போன்றவையும் இயற்கையான கனிவளங்களாகிய நிலக்கரி, இரும்பு, எண்ணெய் போன்றவையும் மலைப்பகுதிப் பயிர்களான தேயிலை, காப்பி, ஏலம், மிளகு போன்றவையும் வடஇந்தியத் தரகு முதலாளிகளாலும் பன்னாட்டு முதலாளிகளாலும் தொடர்ந்து கொள்ளையடிக்கப் படுகின்றன. இந்திய ஒற்றுமை என்ற பெயரில், "நீ அரிசி கொண்டுவா. நான் உமி கொண்டு வருகி-

றேன், இரண்டையும் கலந்து ஊதி ஊதி நானே தின்கிறேன்''-என்னும் சிற்றூர்ப் புறசொலவடைக் கொப்ப இன்று தமிழக மக்களின் அனைத்துப் பொருள்களும் வட இந்தியத் தரகு முதலாளிகளால் கொள்ளை அடிக்கப்படுகின்றன. தமிழக மக்களின் அரசியல் அதிகாரம் வடஇந்தியரிடம் இருப்பதால் தமிழக மக்களின் அனைத்து வளர்ச்சிக்கும் தடை-யாக இருக்கின்றனர். தமிழ் நாட்டின் விளைபொருள்-களும் கனிவளங்களும் தமிழக மக்களுக்குக் கிடைக்காததாலும், தொடர்ந்து மிகக் குறைந்த கூலிக்கு உழைத்துக் கொண்டிருப்பதாலும் நாம உருவாக்கிய அன்றாடம் தேவைப்படும பொருள்களைக் கூட வாங்கிப் பயன்படுத்த முடியவில்லை.

வடஇந்திய அரசு தமிழ் நாட்டிலிருந்து வரி-யாக மட்டும் ஆண்டுக்கு உருபா 4000 கோடிக்கு மேலாகவும். வட்டித் தொழில் மூலம் வடஇந்திய மார்வாடிகளும் சேட்டுகளும் ஆண்டுக்கு உருபா 4000 கோடிக்கு மேலாகவும சுரண்டுகின்-றனர். தமிழ் நாட்டின் வைப்பகத் துறையும் தொழில்துறையும் தில்லி நடுவண் அரசின் கட்டுப்பாட்டிலும் வடஇந்தியத் தரகு முதலாளி-களின் கட்டுப்பாட்டிலும் இருப்பதால், இங்குப் புதிய தொழில்களைத் தொடங்கவோ, இருக்கும் தொழில்களை விரிவாக்கவோ வழியில்லை.

தமிழகத்தில் அடித்தளத்தில் உழல்கின்ற பாட்டாளி மக்கள் தொடர்ந்து வறுமையிலேயே வாடுவதாலும், குமுக மற்றும் அரசு ஒடுக்கு முறை-யாலும் தனனமபிக்கை இழந்து விட்டதாலும், உரிமை உணர்ச்சியற்ற நிலையிலேயே இருக்கின்ற னர். இதனால் எந்தக் குறிக்கோளுமற்று அன்றாடம் இருக்கின்ற சிறிதளவு கூலியையும் மது வகைகளைக் குடிப்பதிலும திரைப் படங்களைப் பார்த்துத் தங்கள் துயரத்தைச் சிறிது நேரத்திற்-கேனும் மறப்பதிலும், பரிசுச்சீட்டை வாங்கி இலவு காதத கிளியாகத் தங்கள் காலத்தைக் கழிப்பதிலும் ஒவ்வொருவரும் மனநோயாளியாகவே உழல்கின்றனர்.

முடிவுரை:

நம்மை ஒன்றாக விடாமல் பல்வேறு வகையில் பிரித்து நம்மைக் காட்டிக் கொடுக்கின்ற அடிமைத் தமிழக அரசியல் தலைவர்களும் அரசு அதிகாரிகளும் வட இந்தியத் தலைவர்களிடமும் அதிகாரிகளிடமும் இரவலர்களைப் போல் கூனிக் குறுகிக் கிடக்கட்டும். நாம் இந்நிலைகளை யெல்லாம் மாற்றித் தமிழக மக்களும் உரிமையோடு தலை நிமிர்ந்து வாழ நமக்குள்ள தடைகளை உடைத் தெறிவோம. நாம் நம் தமிழக மக்களை ஓரணியில் திரட்டுவோம. தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கின்ற அரசியல் கயவர்களையும், இனத்தின் இரண்டகர்களையும் மக்களுக்கு அடையாளம் காட்டுவோம. O

இன்னுமா தமிழா உறக்கம்?

—தமிழ்ப்பித்தன்.

இன்னுமா தமிழா உறக்கம்?—வாளை
எடடா நீ விடிவு பிறக்கும்!

மன்னும் தமிழ்மறம் கண்டே—பகை
வாரா தொழிந்ததும் உண்டே!
இன்றோ தமிழ் மண்ணின் தலைமை—பார்ப்பு
ஏற்றே நமை வீழ்த்தும் நிலைமை!
(இன்னுமா...

பாவலரேறுவின் தொண்டைப் —பற்றி
புரியாத பார்ப்பன முண்டை
காவலில் வைத்தனள் இன்று—அவள்
காலம் நெருங்கிற்று நன்று!
(இன்னுமா...

பாவலரேறுவை மட்டம்—செய்து
பார்ப்பனர் கையோங்கத் திட்டம்!
ஏவல் புரியுதொரு வட்டம்—அதை
இல்லாமல் செய்வம்தரை மட்டம்!
(இன்னுமா...

அடிமை விலங்கை உடைக்கத்—தமிழ்
ஆட்சியை மீண்டும் படைக்க
நொடியும் உறங்கா துழைத்தார்—வேறு
தவறென்ன மற்றவர்க் கிழைத்தார்!
(இன்னுமா...

உரிமைகள் கேட்கவும் தடையா?—பகை
ஓநாய்க்கு இதுஆட்டுக் கிடையா!
சரியான நேரமிது எழுவாய்—செய்த
தவறுக்குத் தேடிக்கொள் கழுவாய்!
(இன்னுமா...

தமிழ்வாழ ஆர்த்திடும் முரசு—அவரை
தளைசெய்வதோ அடிமை அரசு?
நமை நத்தி வந்தவோர் கூட்டம்—இன்று
நமக்கே காட்டுதொரு ஆட்டம்!
(இன்னுமா...

தமிழரைச் சாய்ப்பதே நோக்கு—இற்றைத்
தமிழ்நாட்டு முதல்வரின் போக்கு
அமைதியாய் அவள்பாதம் வருடும்—பதவி
அடையவே அலைகின்ற குருடும்!
(இன்னுமா...

பெயருக்குத் தானடா குடியாட்சி—இது
பார்ப்பனப் பேய்களின் முடியாட்சி
துயருறத் தானா பிறந்தாய்—தமிழ்த்
துணிவையேன் இந்நாள் மறந்தாய்?
(இன்னுமா...

தமிழரைக் காட்டிக் கொடுப்போர்—தம்
தாயையும் கூட்டிக் கொடுப்போர்
தமிழரை ஒன்றாகக் கூட்டு—புற
நானூற்றை மறுபடி காட்டு! (இன்...

Scanned with CamScanner

பெரியோர் பகை பாழ் செய்யும்.

அதியமான்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழர்களுக்குக் கிடைத்த ஒரு பெரிய அறிவுப் பெட்டகம். தமிழ் மொழி, தமிழினம், தமிழ்நாடு ஆகியவை தலை நிமிர்ந்து உலக வரலாற்றில் நிலை பெறத் தம் வாழ்வின் வளங்களைத் துறந்து வேறு சிந்தனையற்று அல்லும் பகலும் அயராது உழைக்கும் உண்மைப் பெரியார்.

தேவநேயப் பாவாணர் உலகமொழி, இன ஆய்வாளர்களால் பெரிதும் புகழப்பட்டு வருகின்ற மொழி ஞாயிறு. அந்தப் பேரறிஞர் பாவலரேறுவைப்பற்றி இப்படிக் கூறுகிறார்.

"பட்டம் பதவியோ செல்வச்சிறப்போ அமைச்சர் துணையோ சற்றும் இல்லாதிருந்தும்... இதுவரை எவரும் செய்யாத வகையில் 'தென்மொழித் திட்டம்' வகுத்து, எதிர்காலத் தமிழ் வரலாற்றில் தம் பெயரைப் பொன்னெழுத்திற் பொறிக்குமாறு செய்து கொண்டவர் தென்மொழி ஆசிரியர் பாவலர் பெருஞ்சித்திரனார் ஆவர். (பாவாணரின் தமிழர் வரலாறு நூல் பக்கம் 345)

இந்தப் பேரறிஞர் பாவலரேறு அவர்களின் அறிவாற்றலை உணர வலிமையற்ற, அறிவில் வறுமையுடைய அரசு, அவரிந்த நாட்டுக்குச் செய்யும் தொண்டினை முடக்குவதற்கென்றே அடிக்கடி அவரைத் தளைசெய்து சிறையிலிருக்கச் செய்கிறது. அவருடைய பணிப் பயனை மக்களை நுகரவிடாதபடி செய்யும் தீச்செயலைச் செய்து கொண்டிருக்கிறது.

எவருடைய துணையிலும் வாழாத அப் பெரியாரை அவருக்கு யாரும் துணையில்லை என்பதற்காக அவரைச் சிறையிலிட்டு அடக்குவது என்பது ஞாயமற்ற தீச்செயல்.

தமிழர்களுடைய வளமே, தமிழ் மொழியின் சிறப்பே அவருடைய குருதியில் கலந்துள்ள அணுக்கள். இது இன்று அமைச்சரவையிலிருக்கும் நெடுஞ்செழியன் போன்றோருக்கு நன்கு தெரியும். ஒரு காலத்தில் அவருடைய தூய தமிழ்த் தொண்டைப் போற்றிப் பேசியவர்கள், அவருடைய பெயரைக் கூறிக் கொண்டதால் பெருமை பெற்றவர்கள். அப்படிப்பட்ட அறிஞரை சிறையில் அடைக்க என்ன கரணியம்? அறிவு என்பது நெருப்பு, அதோடு விளையாடுகிறார்கள்.

பாவலரேறு அவர்கள் வள்ளுவர் காட்டும் பெரியார். இந் நாட்டின் அரசியற் சட்டப்படி அவரும் இந் நாட்டுக் குடி மகன். எழுத்துரிமை. பேச்சுரிமை பெற்றவர். அதனால் குற்றங் கடிதல் பொறுப்பில் இயங்கும் பேரறிஞர் அவர் என்பதை மறந்து விட வேண்டாம். அரசியலார் எண்ணிப் பார்க்க வேண்டும். வள்ளுவரின் பெரியாரைத் துணைக் கோடலில் வரும் குறள்கள் பத்தும் முத்துக்கள். அதில் ஓர் அரசு எப்பொழுது வீழும் என்பதற்கு பேராசான் வள்ளுவர்,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும் (குறள் 448)

என்று அறிவுரை கூறுகிறார். அரசை நடத்துகிறவர்களைக் கண்காணிப்பது அறிஞர்கள்தான். அவர்களுக்குத்தான் முக்கால நிகழ்ச்சிகளின் நிலைகளை உணர்ந்து கொள்ளவும் முடியும், கூறவும் தெரியும். அரசனைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தமக்கு வளமான வாழ்வைத் தரும பதவிக்காக அரசன் செய்யும் குற்றங்களைக் கூட புகழ்ந்து பேசி அவன் படுகுழியில் வீழும் நாளை எதிர்நோக்கி இருப்பார்கள். இவர்களை அரசன் அடையாளம் காணமாட்டான். ஏனென்றால் தனக்குக் கிடைக்கும் தகுதியற்ற புகழிலே மூழ்கிவிடுவான். தன் குற்றம் தனக்குத் தெரியாது. இவ்வேளையில் தான் அறிஞர்கள் அரசனை இடித்துரைத்துக் குற்றங் கடிய முனைவர். அதைக் குற்றமென்று சினங்கொண்டு இடிப்பாரைத் துன்புறுத்தினால் தன்னைக் கெடுப்பார் இலலையெனத் தப்புக்கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும் அரசு வீழும்.

அதனாலேயே அக்கால முடியாட்சி மன்னர்கள் அறிஞர்களை தம் அவையிலே தம் துணைக்காக வைத்துக் கொண்டனர். அவர்கள் இடித்துரைக்கும் கூற்றுகளுக்குச் செவிசாய்த்துத் திருந்திக் கொண்டனர். அப்படிப் பட்ட பல நிகழ்ச்சிகளைப் புறநானூற்று நூலிலே காணலாம்.

இக்கால் குடியாட்சி நடக்கிறது-பல அரசியற் கட்சிகள் இருந்து ஒரு கட்சியை இன்னொரு கட்சி சமயம் பார்த்து வீழ்த்தி ஆட்சிக்கு வருவதற்கு அல்லும் பகலும் சிந்தித்துக் கொண்டிருக்குங்காலம். குடியாட்சியில் ஆளவருபவர்கள் அனைவரும் அரசியல் தெரிந்தவர்கள் எனக் கூற முடியாது. மக்கள் எப்படியோ அப்படியே ஆட்சியாளர்களும் இருப்பார்கள். மக்களிடம் எப்படியாவது சொல்லி ஒப்போலைகளைப் பெற்றுக் கொண்டு ஆட்சியில் அமர்ந்தவுடன் ஒப்போலைகளை வழங்கிய மக்களை மறந்து விடுவார்கள். மக்களும் ஆட்சியாளர் என்ன செய்கிறார்கள் அல்லது செய்தார்கள் என்பதை மறந்து விடுவார்கள். இந்நிலை இந் நாட்டின் மக்களுடைய மன நிலை. அந்த நேரத்தில் அரசியற் கட்சிகள் என்ன கற்பனைகளைக் கூறுகின்றனவோ அதை அப்படியே நம்பி ஒப்போலைகளைக் கண்மூடித் தனமாக வழங்கி விடுவார்கள். ஆட்சியாளர்களால் வரும் துன்பங்களை தங்களுடைய விதி' என்று கூறி

அமைந்து விடுவார்கள். ஏனென்றால் இந் நாட்டு மக்கள் கற்றவர்கள் தாம். ஆனால் பகுத்தறிவு அற்றவர்கள். தந்தை பெரியார் மறைந்ததற்குப் பின் பகுத்தறிவிற்குப் பொருள் தெரியாமல் போய்விட்டது. அதனாலேயே இந் நாட்டு அறிஞர்கள் துன்பப்படுகிறார்கள். அறிஞர்களை அடக்கினால்தான் மக்கள் அறிவு பெறாமல் இருப்பார்கள் என்ற அசைக்க முடியாத கருத்து இந்த நாட்டு அரசியற் கட்சியினருக்கு நன்றாகவே தெரியும். அதனாலேயே பாவலரேறு போன்ற அறிஞர்களை அடிக்கடிச் சிறையில் தள்ளுகிறார்கள். பகுத்தறிவை மக்களிடம் பரப்பும பணியை அவர்கள் தொடர மாட்டார்கள் என்ற எண்ணம் அரசாளர்களுக்கு உண்டு. அதனால் பகுத்தறிவு அற்ற மக்கள் உருவாகிறார்கள். அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவை உறுப்பினர்கள் சட்டசபையிலேயே ஒருவரை ஒருவர் ஆடையை அவிழவிட்டு விட்டு அம்மணத்தோடு அடித்துக்கொள்கிறார்கள்; காட்டு விலங்காண்டிகளைப் போல. இப்படிபட்ட ஆட்சியாளர்களுக்கு எப்படி அறிஞர்களைப் பற்றித் தெரியும். அதனாலேயே இந்நாட்டின அறிஞர்கள் துனபப்படுகிறார்கள்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் செய்த குற்றம் என்ன? தனித்தியங்கும் ஆற்றல் மிக்க தமிழை உலகிற்கு எடுத்துக் காட்டியது குற்றமா? உலகத்தில் உள்ள தமிழின மக்களுக்குப் பிற இனத்தால வரும் இடர்களைத் தடுத்து நிறுத்தக் கூறியதும குற்றந்தானா? தமிழ் நாட்டு வீர மிக்க வரலாற்றை மக்களிடம கூறியது குற்றமோ? தமிழ் மக்கள வாழ்வியலில் நிகழும பிற மக்கள தாக்கங்களைத் தடுக்க முனைந்தது குற்றமெனக் கூறுகிறார்கள் போலும்! தமிழ் மக்கள் உலகெங்கினும் அடி, உதை வாங்கி அழுவதைக் கண்டு மனமிரங்கிக் கண்ணீர்க் கதை சொன்னதும், கண்ணீர் விட்டதும் குற்றமாகுமா? இவையாவும் குற்றமெனில் மக்களுக்காக ஆளுகிறோம் எனப் பொய் கூறும் ஆட்சி தேவை இல்லை.

பாவலரேறு அவர்கள் எங்கேனும் பாலத்துக்குக் குண்டு வைத்தாரா? எந்த உயிருக்கும் ஏதம் விளைவித்தாரா? பேருந்துகளுக்குத் தீ வைத்தாரா? கோவில்களை உடைத்தாரா? அல்லது அங்குக் கொள்ளை அடித்தாரா? யார் மீதாவது எரிநீரத்(திராவகம்)தை வீசிக் கெடுத்தாரா? சந்தனக் கட்டைகளை கடத்தினாரா? வெளி நாட்டிற்குத் தம் நாட்டுக் கமுக்கங்களைக் காட்டிக் கொடுத்தாரா? எவ்வகையான வன்முறையிலும் ஈடுபடாத பாவலரேறு அவர்களைச் சிறைக்குள் வைத்தது தமிழ் நாட்டுக்கே கேடாகும்.

இந் நாள் வரை அவர் ஒரு ஊசியைக் கூட எடுத்துச் சென்று வன்முறையில் ஈடுபடாத அன்புள்ளங் கொண்டவர். தமக்கு எதிராகச் செயல்பட்டவர்களைக் கூட அவர்கள் தமிழர்கள் என்பதால் பகை உணர்வு கொள்ளாமல், ஏச்சையும் பேச்சையும் பொருள்படுத்தாமல் தம் தமிழ்த் தொண்டையே மேற்கொண்டவர்.

கடந்த 10-3-93 அன்று சென்னையில் உலகப் பொது மறைநூலாகிய திருக்குறள் மெய்ப் பொருள் உரையை வெளியிட இருந்தார். தமிழறிஞர்களும், தமிழ் உறவோரும் அந் நாளை எதிர்பார்த்திருந்தனர். அந் நூலை வெளியிட விடாதபடிக்கு அரசு அவரைச் சிறை இருக்கச் செய்து விட்டது. அதுவும் கொடுமையாளரைத் தண்டிக்கப் பயன்படுத்த வேண்டிய தடாச் சட்டத்தில் வழக்குப் பதிவு செய்து, பிணையலில் கூடப் போக விடாதபடி செய்து விட்டனர். 18-3-93-இல் அரசு வழக்கறிஞர் திரு. இராமரத்தினம் அவர்கள் திருக்குறள் உரை நூலை வெளியிடக் கூடாது என்றக் கருத்தை வழக்கு மன்றத்தில் பேசி இருக்கிறார்.

தமிழ் நிலம் என்கிற கிழமை இதழில் எழுதப் பெறும் செய்திகளே இந்த அளவு பிரிவினைக் கருத்துகளை உள்ளடக்கி வைத்துள்ளது எனில் அவரின் வரப்போகும் நூல்கள் எந்த அளவு கடுமையானதாக இருக்குமோ சொல்ல இயலாது— எனவே அந்த நூல்கள் வராமல் இருக்க வேண்டுமானால் அவர் வெளியே விடப்படாமல் இருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (தமிழ் நிலம் இதழ் எண் : 162.)

மேலே எடுத்துக் காட்டப்பட்ட வழக்கு மன்றச் செய்தியைக் காணுங்கால் தமிழ் மொழிக்குத் தமிழர்களே எதிரிகளாகவும், இரண்டகர்களாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று நன்கு விளங்குகிறது.

திருக்குறள் உரையையே வெளிவராமல் தடுக்கும் நிலை தமிழகத்தில் இருக்கிறதே! எனக் கவலைப்பட வேண்டியுள்ளது. இந்தக் தருக்கத்திலிருந்து திருவள்ளுவரும் குற்றஞ் செய்தவராகிறார். திருவள்ளுவருக்கும் இனி தடை வந்தாலும் வரலாம்! அந்த அளவிற்குத் தமிழர்கள் தம் தாய் மொழி மீது சற்றும பற்றற்றவர்களாக இருக்கிறார்கள்.

திருக்குறளை உலகப் பொதுமறை எனவும் மாந்தவியல் அறநூல் எனவும் உலகப் பேரறிஞர்கள பேசிவரும் கூற்றுக்கு என்ன மதிப்பு இருக்கிறது? தமிழா உன் நிலை எவ்வளவு தாழ்ந்து கிடக்கிறது என்பதை எண்ணிப்பார்! இந்த நிலைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் பிரிவினைக்கருத்து வளராமல் என்ன செய்யும என்பதையும் அரசு எண்ணிப் பார்க்கவேண்டும்.

தமிழர்களுடைய வரலாறுகளை மாற்றி எழுதத் தமிழர்களே உடந்தையாக இருப்பார்கள். தமிழுக்கும், தமிழர்களுக்கும் எதிர்காலம் வாழ்வைத் தராது. இதைச் செய்து கொள்ள இனித் தமிழர்களே

Scanned with CamScanner

இரண்டகர்களாக இருப்பார்கள். அதனாலேயே பாவலரேறு அவர்கள் 1967-ஆம் ஆண்டிலேயே "தானே அழியும் தமிழன்" என்ற தலைப்பில் ஒரு பாடலை எழுதினார். அது:—

"தமிழனைப் பிறர் யாரும்
தாழ்த்த வில்லை—அவன்
தம்பியே தாழ்த்து கின்றான்!—இந்தத்
தமிழனைப் பிறர் யாரும
வீழ்த்த வில்லை—அவன்
தமையனே வீழ்த்து கின்றான்;

தமிழ் நாட்டை பிறர் யாரும்
ஆளவில்லை—இந்தத்
தமிழனே அடிமை தந்தான்—இன்று
தமிழையும் பிறர் யாரும்
சிதைக்கவில்லை...இந்தத்
தமிழனே சிதைத்து நிற்பான்—

(—கனிச்சாறு முதல் தொகுதி பாடல் 92·) என எழுதினார்.

தமிழறிந்த அறிஞர்கள் தமிழ் நாட்டு அரசியலில் இல்லாவிட்டால் தமிழர்களுக்கு நலங்கிட்டாது; என்பதை உணர்ந்த பாவேந்தர்.

"தமிழாய்ந்த தமிழன் தான்
தமிழ் நாட்டில் முதலமைச்சாய்
வருதல் வேண்டும்.
தமிழ்ப் பகைவன் முதலமைச்சாய்த்
தமிழ் நாட்டில் வாராது
தடுத்தல் வேண்டும்.

(தமிழியக்கம் பாடல் 8)

எனக் கூறினார். தமிழ்ப் பகைவன் யாராக இருந்தாலும் அவனைத் தமிழ் நாட்டு அரசுப் பணிகளில் வர விடாமல் தடுக்க வேண்டும். தமிழினப் பகைவர்களுடைய ஆட்சியில், தமிழகம் இருப்பதால் தமிழறிஞர்களை அடக்கி ஒடுக்கி வைக்க எண்ணுகிறது. அதற்குத் தமிழர்களும் உடந்தையாக இருக்கிறார்கள்.

பாவலரேறு அவர்களைச் சிறையிலிட்டு வைத்தாலும் அவருடைய சிந்தனை தமிழர்களைப் பற்றியே இருக்கும். தமிழர்களைப் பற்றியே சிந்திக்கும். அவர் எழுதுகோல் தமிழக முன்னேற்றத்திற்கே எழுதும் அவரின் வாய் தமிழ்ச் சொற்களையே பேசும்; எனவே அவரை அரசு பகைத்துக் கொள்ள வேண்டாம். யாரைப் பகைத்தாலும் சொற்பயிற்சியாளர்களை அரசும் பகைத்தல் கூடாது என்பதை வள்ளுவர்

'வில்லேர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை' (குறள் 872)

என முழங்குகிறார். விற்பயிற்சி உடையவரைப் பகைத்தாலும், சொற் பயிற்சி உடைய புலவரோடு பகை கொள்ளுதல் கூடாது. அதல் பாவலரேறு அவர்களைத் தமிழ்த் தொண்டாற்ற வழிவிடுக. அவரெழுதி வெளியிட இருக்கும் திருக்குறள் மெய்ப்பொருள் நூல் வெளியில் வருவதைத் தமிழக அரசு தடுக்க வேண்டாம். அச் செயல் தமிழ் அறிஞர்களைத் துன்புறுத்தும். அதைத் தடுத்தால் அரசு வீழ்வதற்கு எழும் கரணியங்களில் இதுவும் ஒன்றாக அமைந்து விடும். 'பெரியோர் பகைப் பாழ்ச் செய்யும்' என்பதை அரசு எண்ணிச் செயல் படவேண்டும். O

சிறப்பு மடல்:

பேராசிரியர். சாலை இளந்திரையனார் அவர்கள், 'தடா'ச் சிறையில் இருக்கும் நம் பாவலரேறு ஐயா அவர்களுக்கு விடுத்த மடல்:

நண்பருக்கு,

அன்புடன்...உங்களை நேரில் வந்து காண முடியாதபடி சட்டங்கள் உள்ளன. ஆயினும் சிறையில் உள்ள பொறுப்பான அதிகாரிகளும், இளையவர்களும்,—உங்களை நன்கு அறிந்திருப்பதால் உங்களிடம் அன்பாக நடந்து கொள்கிறார்கள் என்று எழுதியிருந்தீர்கள். இதுவே இப்போதைக்கு ஓரளவு ஆறுதல் எந்த இருட்டுக்கும் விடிவு உண்டு.

நிற்க, 3-4-93-இல் நமது இறைக்குருவனாரும் பொற்கொடியும் நடத்திவரும் திருவள்ளுவர் மழலையர் பள்ளி ஆண்டு விழாவுக்குச் சென்று, அந்த எளிய குழந்தைகளையும் அவர்களுக்குக் காப்பாக விளங்கும் நம்மவர்களையும் கண்டு அளவளாவி மகிழ வாய்த்தது. வேறு சிலர்களைப் போல, குடும்பத்தை வேறு திசையில் திருப்பி விடாமல் எல்லாரையும் தமிழ் நலப் பணிகளிலேயே ஈடுபடுத்தி இருக்கிறீர்கள். இந்தக் கொள்கை நெறி உண்மையை அங்கே நான் எடுத்துரைத்தபோது வந்திருந்த எல்லாருமே புதிய மகிழ்ச்சித் தெரிவித்தார்கள். ஏதோ ஒரு மாநாட்டு நிகழ்ச்சியில் "பேராசிரியர் சாலையாரும், நானும் தான மெய்ம்மையான தமிழ் நலத் தொண்டர்கள் எனறு சொன்னீர்கள்." உங்கள் குடும்பத்து அனைவரையும இந்தக் தொண்டிலேயே ஈடுபடுத்தி இருக்கிற உங்கள் திறப்பாட்டை அறியும் போது என்னை விட நீங்களே முதன்மைத் தமிழ்த் தொண்டர் என்னும் குரல் என மன ஆழத்திலிருந்து எழுகிறது. உங்களைச் சிறைப்படுத்தியுள்ள நிகழ்ச்சியை நினைக்கும் தோறும் "சேதாரம் இல்லாமல் நகை செய்ய இயலாது" என்னும் கருத்துரையே என் நெஞ்சத்தில் எதிரொலிக்கிறது. அன்புள்ள.

—சாலை, இளந்திரையன், சென்னை.

நம் பாவலரேறு ஐயா அவர்கள் பேராசிரியர் சாலை இளந்திரையனுக்கு விடுத்த விடை மடற்படி:-

பெருஞ்சித்திரனர் சென்னை-3
தடாச் சிறையாளர். (21-4-93)
சென்னை நடுவண்சிறை. மேழம், எ

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து"

பேரன்பின் இனிய தமிழ் நெஞ்சீர்,

வணக்கம். நலமே விழைக.

தாங்கள் விடுத்த 18-4-93-ஆம் நாளைய அன்பு மடல் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி, நன்றி. அம்மாவுக்கும் என் வணக்கம் கூறவும்.

அதற்கு முன்னர் தாங்கள் முதலமைச்சருக்கு விடுத்த மடலின் படியும், காலத்தே கிடைத்தது. அதற்கும் என் நன்னெஞ்சம் இக்கால் நன்றி தெரிவித்து மகிழ்கிறது.

இருப்பினும், அம்மடல் தேவையில்லாத ஒன்று என்றே நான் கருதினேன். அதிகாரம் மது மயக்கத்தைப் போன்றது. அதனின்று பிரிந்து நின்று, உண்மைக் காணத் தனி ஆட்சித்திறன் வேண்டும். கசடற்ற அறிவுத் திறனும் வேண்டும்.

'களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று!

என்னும் வாய்மொழியே அவர்கட்குச் சாலும்,

உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல் — என்பதும்.

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்' — என்பதும்

அறியாத ஆங்கிலப் பள்ளியில் பயின்றவர், அவர். எனவே, நம் பொதுமை அறத்தை அவர் உணரார், நிற்க.

'திருவள்ளுவர் மழலையர் பள்ளி'யின் இரண்டாம் ஆண்டு விழாவிற்குத் தாங்களும் அம்மையாரும் சென்றதும், அங்கு இருவரும் உரையாற்றியதும் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்ட குழந்தைகளுக்கு அம்மையார் பரிசுகள் வழங்கியதும், இறுதியில் தாங்கள் இருவரும் அப் பள்ளியின் வளர்ச்சிக்கு அறக் கொடையாக உருபா ஓர் ஆயிரம் அன்புடன் வழங்கியதும், பொற்கொடியே நேரில் வந்தும், ஒளிப் படங்களைக் காட்டியும் பெருமிதத்துடன் கூறினர். அன்பு மகளை விட நான் பெரிதும் மகிழ்ந்திருப்பேன் என்பதும் தாங்கள் அறிவீர்கள்.

அவளின், நன் முயற்சிக்குத் தாங்கள் இருவரின் வாழ்த்துரையும், கொடை வழங்கலும் மேலும் ஊக்கத்தை அவர்குத் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. நம் மருமகனர் புலவர் இறைக்குருவனர் அவர்கள் என்னைச் சந்திக்க வாய்ப்பில்லையாதலால், அவர் வாயாலும் அந் நிகழ்வுப் பெருமையைக் கேட்டு மகிழ்தற்கில்லை. அவர்களை இவ்வகையில் மகிழ்வித்து ஊக்கிய தங்கள் இருவர்க்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றி.

நம் பிள்ளைகள் அனைவரும் தங்கட்கும் பிள்ளைகளே! அவர்கள் பெருமை தங்கட்கும் பெருமையே!

'தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனி'து அன்றோ?

ஐயா, நான் இங்கு முழுநலம். 'திருக்குறள் மெய்ப் பொருளுரையைத் தொடர்ந்து எழுதி, அரசு எனக்குத் தந்த கேட்டினை மக்கட்கு நன்மையாக மாற்றி வருகின்றேன்.

இங்குள்ள அன்பர் ஒருவர்க்கு **'அறிவியக்கம்'** வந்தது. அதில் தாங்கள் முதலமைச்சர்க்கு விடுத்த வேண்டுகை வந்திருந்தது.

அத்துடன், இதழ் நிறுத்தம் பற்றியதோர் அறிவிப்பும் வந்திருந்தது கண்டு துணுக்குற்றேன். அந்நிலை மிகவும் வருந்தத்தக்கது.

'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை'

'கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடைய தில்'

என்னும் இரண்டு குறள்களை முன் வைக்கிறேன்.

ஐயா, யான் எழுதிவரும் 'திருக்குறள் மெய்ப்பொருளுரை' நூலினைத் தாங்களும், அம்மையாரும் கண்ணுறின் இதுவரை எதற்கும் பெறுத மகிழ்வையும் பெருமையும் பெறுவீர்கள். காலம் விரைந்து கனியும், பொறுத்திருப்போம்.

பிறபின். அன்புக்கு நன்றி. அன்பு,

பாவலரேறு ஐயாவை விடுதலை செய்யச் சொல்லி அஞ்சலட்டை அனுப்பிவிட்டீர்களா?

இல்லையெனில் இன்றே அனுப்புங்கள்...

அஞ்சலட்டையில்

'தமிழக அரசே!
தமிழறிஞர் பெருஞ்சித்திரனர் அவர்களின் தமிழ்ப்பணியைத் தடுக்காதீர்! உடனே அவரை விடுதலை செய்க!

முகவரி.
தமிழக முதல்வர்
(தனிப்பிரிவு)
தலைமைச் செயலகம், சென்னை-9

இந்தியச் சுரண்டலுக்கு...இன்னுமொரு நெய்வேலி!

நெய்வேலியிலும் அதைச் சுற்றியுள்ள கம்மங்களிலும் (கிராமம்) 'லிக்னைட்' எனப்படும் பழுப்பு நிலக்கரியை 1956 முதல் இந்திய அரசு வெட்டி எடுத்துத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு வருகிறது. இந்த நிலக்கரியைக் கொண்டு அங்கு உருவாக்கப்படும் மின்சாரத்தில் 23% மட்டுமே தமிழ் நாட்டிற்குத் தரப்படுகிறது. இந்த மின்சாரத்திற்கும் தமிழ்நாடு அரசு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. கட்டணம் செலுத்தக் காலந்தாழ்த்தால் அதற்குத் தண்டத் தொகையாக வட்டி கட்டவேண்டும்.

நிலக்கரி சுரங்கத்திற்காக அப்பகுதி தமிழர்கள் தங்கள் நிலங்களை இந்திய அரசு குறிப்பிட்ட, குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. ஒரு குடும்பத்துக்கு ஒருவருக்கு வேலை என்று இந்திய அரசு அளித்த உறுதிமொழிப்படி இவர்களில் பல குடும்பங்களுக்கு இன்னமும் கூட இந் நிலக்கரி நிறுவனத்தில் வேலை தரப்படவில்லை. ஆனால் வந்தேறிப் பார்ப்பனரும் வடஇந்திய ஆளுமைச் சாதியினரும் இந்நிறுவன உயர் பதவிகளில் உடும்புப் பிடியாக வந்து அமர்ந்து கொண்டுள்ளனர்.

நெய்வேலி நிலக்கரி மட்டுமன்றி சேலத்து ,பாக்சைட்' (அலுமினியம்) இரும்பு, தஞ்சைப்பகுதி கன்னெய் இயற்கை வளி போன்ற கனிப்பொருள்களும் கிராபைட் போன்றனவும், அரிசி, சர்க்கரை, வாழை, தேயிலை, மிளகு. குளம்பி,(காப்பி) ஏலம், சந்தனம் போன்ற விளை பொருள்களும் ஆழ்கடல் மீன் வளமும் இன்னும் பல செலவங்களும் தமிழகத்திலிருந்து இந்திய அரசால் சுரண்டப் படுகின்றன. இப்போது தென் ஆர்க்காடு கரையோரப்பகுதியில் இலால் பேட்டை அருகில் 'பழுப்பு' நிலக்கரி படிவங்கள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் பீகார் போன்று தமிழ்நாடு நிலக்கரியில் வளமான ஒரு பகுதி என்று தெரிந்துள்ளது. இலால் பேட்டையில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'பழுப்பு' நிலக்கரிப் படிவின் உயரம் 5 'மீட்டர்' என்று மதிப்பிடப்பட்டுள்ளது கிழக்கு கடற்கரை முழுவதும் இராமேசுவரம் வரையில் 'பழுப்பு'ப் படிவங்கள் இருப்பதற்கான வாய்ப்பினை இப்போதைய இலால் பேட்டை கண்டுபிடிப்பு உறுதிப்படுத்தியுள்ளது என்று இந்திய நிலவியல் கணக்கீட்டு அறிவியலார் கணிக்கின்றனர் O

பாவலரேறு அவர்களுக்குத் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சித் துணைச்செயலர் திரு.வெங்கட்ராமன் அவர்கள் மடல்.

அன்பிற்கினிய ஐயா அவர்களுக்கு, வணக்கம். தாங்கள் சிறைப்படுத்தப்பட்ட பின் நீண்ட இடைவெளிக்குப் பிறகே இக் கடிதம் எழுதுகிறேன். மன்னியுங்கள்.

இடையில் மங்கிக் கிடந்த தமிழின உணர்வு இப்போது மீண்டும் மேலெழத் தொடங்கியுள்ளது. அதனை "முளையிலேயே கிள்ளி விட" ஆட்சியாளர்கள் முனைகிறார்கள். அவர்கள் அடக்குமுறைகள் நாம் செய்யும்'பிரசாரத்'தைவிடப் பத்துமடங்கு இன உணர்ச்சி எழவே பயன்படும் என்பது திண்ணம்.

'தடா' தமிழகத்திலும் மெல்ல மெல்ல இற்று வருகிறது. அது விரைவில் விழுந்து நொறுங்கும்.

தங்களைச் சிறைப்படுத்திய தமிழின 'விரோத' நடவடிக்கையை பல்வேறு பொதுக் கூட்டங்களிலும் கண்டித்துப் பேசும்போது. கணிசமான மக்கள் நமது ஞாயத்தை உணர்கிறார்கள்.

தாங்கள் திருக்குறள் உரை எழுதி வருவதாக அறிந்தேன், மகிழ்ச்சி.

ஆயினும் நாங்களெல்லாம் தங்களைச் சந்திக்க முடியாமல் 'தடா' தடுப்பதுதான் துன்பம்!

விரைவில் பிணை கிடைக்குமென நம்புகிறேன். சந்திப்போம். அன்பு, கி வெங்கட்ராமன் சிதம்பரம்.

3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கம், தமிழ்நாடு மக்கள் இயக்கம், விடுதலைக் குயில்கள், திலீபன் மன்றம், தமிழக மாணவர் இயக்கம், தமிழர் குடியரசுக் கட்சி — ஆகிய அமைப்புகள் சேர்ந்து பாவலரேறு ஐயா அவர்களை விடுதலை செய்யச் சொல்லி பெருமளவில் துண்டறிக்கைகள் அச்சிட்டுப் பரப்பின. ஆங்கிலத்தில் அதைப் பெயர்த்து வெளிநாட்டில் உள்ள பலருக்கும் அனுப்பியுள்ளன.

புரட்சிகர இளைஞர் முன்னணி:

அமைப்பினர் — பாவலரேறு ஐயா அவர்களை விடுதலைசெய்யக்கோரித் தமிழக அளவில் வெகுவாக இயக்கங்கள் நடத்தி வருகின்றனர்- துண்டறிக்கை அளவில் பரப்பல், மாநாடு, பொதுக் கூட்டம் நடத்துவதான அளவில் செயல்பட்டு வருகின்றனர். சென்னையில் மே-2 இலும் ஈரோட்டில் மே-10-இலும் மாநாடுகள் நடத்தத் திட்டமிட்டனர். மே 2-இல் சென்னையில் நடத்த இருந்த மாநாட்டை அரசு தடை செய்து விட்டது. எனவே வழக்குமன்றம் அணுகி மாநாட்டை நடத்துவது என முடிவெடுத்தனர்.

உ.த.மு.க. துணைப் பொதுச் செயலாலர் தி.மு.அரச மாணிக்கனார் அவர்கள் ஈரோட்டுக்கிளை அளவில் ஐயா அவர்களின் சிறைப்படுத்தத்தைக் கண்டித்துத் துண்டறிக்கைகள் அடித்துப் பரப்பினர்கள்.

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

11-30 மணி அளவிற்கு நடுவர் திரு.சௌந்திரப் பாண்டியன் வழக்கு மன்றத்திற்குள் வந்தார்.

சில மணித் துளிகளில் ஐயா அவர்களும் வண்டியிலிருந்து வழக்கு மன்றத்திற்குள் அழைத்து வரப் பெற்றார்கள்.

வழக்கு மன்றத்திற்குள்ளும், மன்றத்தின் வாயிலிலுமாக ஐம்பது காவலர்கள் கருவிகளோடு நின்றிருந்தனர்.

ஒலி இழந்திருந்த அந்த வழக்கு மன்றத்திற்குள் ஒளிப் பிழம்பாய் நம் ஐயா அமர்ந்திருந்தார்கள்.

"உங்களுக்குக் கை விலங்கு போட்டு அழைத்து வந்தார்களா...?" ஐயா அவர்களைப் பார்த்து நடுவர் கேட்டார்.

"போட வற்புறுத்தினார்கள்... நான் மறுத்தேன்..."—பாவலரேறு ஐயா அவர்கள் கூறினார்கள்.

"அப்படியா...அவர்களுக்குப் போடக் கூடாது; அவர்கள் புலிகள் இயக்கத்தவருமில்லை; இலங்கையைச் சேர்ந்தவருமில்லை... அவரைப் பற்றி இதற்குமேல் நான் சொல்ல இயலாது. நீங்கள் அவர்களுக்கு விலங்கு போடக் கூடாது' —என்று காவலர்களை எச்சரித்த நடுவர்—அரசு வழக்கறிஞரை அழைத்து—

"காவல்துறையினருக்குச் சரியானபடி எடுத்துச் சொல்லுங்கள். இன்னொரு முறை இது போன்று நடந்திடக் கூடாது"—என்றார்.

உடனே நம் வழக்கறிஞர் திரு.கலைமணி அவர்கள் நேற்று ஐயா அவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் பெற்ற பொழுது கூடக் கை விலங்கு போட காவலர்கள் முயன்றதை எடுத்துச் சொன்னார்.

நம் வழக்கறிஞர் திரு.கலைமணி அவர்கள் ஐயா அவர்களுக்குக் காவல் நீட்டிப்புச் செய்தல் கூடாது— காவல் நீட்டிப்புச் செய்வதற்கான காரணம் ஏதும் இல்லை—என்று நடுவரிடம் முறையீடு செய்தார்.

நடுவர், அரசு வழக்கறிஞரைக் கேட்டார். அரசு வழக்கறிஞர் விரைந்து வழக்கை நடத்த இருப்பதாகக் கூறினர். அப்படியானால் விரைந்து குற்ற அறிக்கையைக் கொடுத்துவிட வேண்டும் என்று கூறி—7-7-93-வரை ஐயா அவர்களுக்குக் காவல் நீட்டிப்புச் செய்தார். அதற்குள் குற்ற அறிக்கையைக் கொடுக்கும்படியும் கூறினர்.

அதன் பிறகு வழக்கறிஞர் திரு.கலைமணி... ஐயா அவர்களின் குடும்பத்தினரை ஐயாவுடன் பேச இசைவு கேட்ட பொழுது—நடுவர் இசைவளித்தார். அவர்கள் ஐயா அவர்களை வழக்கு மன்றத்திற்குள் பார்த்துப் பேசினர்.

அதன் பிறகு நம் வழக்கறிஞர்—வெளியூரிலிருந்தும்—மிகு தொலைவிலிருந்மெல்லாம் அன்பர்கள் வந்திருப்பதாகவும் அவர்கள் ஐயா அவர்களைப் பார்க்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்ற பொழுது—
நடுவர், "பார்க்கட்டும்; ஆனால் சற்று தொலைவிலிருந்து பார்க்கலாம்.பாதுகாப்புக் கருதி நான் இதைச் செய்கிறேன். ஐயா அவர்களுக்கு நிறைய அன்பர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் சிலர் வேண்டாதவர்கள் அன்பர்கள் போன்றே பேசிக்கொண்டே ஐயா அவர்களுக்குக் கெடுதல் செய்யலாம் அல்லவா' —என்றார்.

அதன் பிறகு நெடுந்தொலைவில் இருந்தெல்லாம் வந்திருந்த மெய்த்தமிழ் அன்பர்கள் ஐயா அவர்களைக் காண மொய்த்து விட்டனர்.

திரு. அரசமாணிக்கனார் (ஈரோடு), திரு.வடிவேலனார் (ஈரோடு), திரு துரையரசன், திரு.திருமாறன், திருவாட்டி ஆண்டாள் (நெய்வேலி), திரு.தமிழ்நெஞ்சன்(துறையூர்), திரு. மா. செ.தமிழ்மணி(நெமலி), திரு.தமிழ்வேந்தன் எழில் (திருவள்ளூர்), திரு. சந்திரசேகரன், திரு.துரை—தென்னவன், திரு. அறிவுடைநம்பி, திரு.இராசாமணி—ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அவர்கள் அனைவரையும் கண்டு 'அறிவிலே பெரு நெருப்பாய்',ஆற்றலில் சூறைக்காற்றாய்' நிற்கிற நம அரிமாப் பாவலர் 'அன்பின் மழை நீராய்' அனைவரையும நலம் கேட்டார்கள்.

சிறிது நேரம் கழித்து—தாம் உள்ளே திருக்குறள் மெய்ப்பொருளுரை எழுதிக் கொண்டிருப்பதைக் கூறினார்கள். பத்து மணித்துளிகள் அளவு பேசியதற்குப் பின்னர் அன்பர்கள் அனைவரும் அனுப்பப்பெற்றனர். அதன் பிறகு ஐயா அவர்கள் மூடுந்தில் அமர்த்தப்பெற்றுச் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

சிறை என்ன செய்யும் நம் தமிழ்க்கடலை!
தமிழ் புகுந்த நெஞ்சிற்குத் தளர்வில்லை!
உடலுக்கும் முதுமையில்லை! O

அன்பர்கள் கவனிக்க!

உ.த.மு.க. நிறுவனரும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆசிரியருமாகிய நம் பாவலரேறு ஐயா அவர்களின் 'தடா' வழக்குச் செலவுகளுக்குப் பங்கேற்று கழகத்தினரும், அன்பர்களும், ஆர்வலர்களும் நன்கொடை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—அமைச்சர்.

Scanned with CamScanner

புரட்சிகர இளைஞர் முன்னணியின் நாடு அளாவிய மாநாடுகள்!

தமிழக அரசின் அடக்கு முறையைக் கண்டித்துத் தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுதலை செய்யக்கோரி நாடு அளாவிய பல இடங்களில் மாநாடு நடத்தத் திட்டம் தீட்டப்பட்டு சில இடங்களில் வெற்றியாக நடத்தியுள்ளனர். சில இடங்களில் மாநாட்டிற்கு இசைவு கொடுக்காமல் தடைசெய்யப் பட்டது.

2-5-93—சென்னை ஆவடி.
10-5-93—ஈரோடை
14-5-93—காரைக்குடி
16-5-93—வெங்காலூர்.
19-5-93—நெல்லை
24-5-93—திருப்பத்தூர்.

ஆகிய இடங்களில் மாநாடு நடத்த அறிவிப்புச் செய்திருந்தது. ஆங்காங்கு அறிவிப்புச் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டன. இவற்றில் ஈரோடையிலும் வெங்காலூரிலும் மட்டும் மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

ஈரோடையில் அவர்கள் முன்வைத்த செய்திகளாவன.

"பெருஞ்சித்திரனார் அவர்கள் கடந்த 35 ஆண்டு காலமாகத் தூய தமிழ்ப் பணியாற்றி வருபவர். தமிழ்க்கடல் மறைமலை அடிகள், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் வழியில் அவர்களைத் தொடர்ந்து தூய தமிழியக்கம் பேணிவரும் பெருமை சான்றவர்.

அத்தகைய தமிழறிஞரைத் தமிழக அரசு 'தடா'ச்சட்டத்தில் தளைப் படுத்தி கடந்த 27-1-93 முதல் சிறை வைத்துள்ளது. ஆனால் பாபர் மசூதியை இடித்த மதவெறிக் கும்பலுக்குக் கோவையில் மாநாடு நடத்தவும், சென்னையில் பேரணிப் பொதுக் கூட்டம் நடத்தவும் அனுமதியளித்து பாதுகாப்பும் தருகின்றது.

தமிழ்நாட்டில் தமிழறிஞர்களுக்குக் கொடுஞ் சிறை! மதவெறிக் கூட்டத்திற்கு நகர்வலம் வரப் பாதுகாப்பு!

இந்தக் கொடிய அடக்குமுறையைக் கண்டித்தும் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்கள் மீது தொடர்ந்துள்ள அடக்குமுறை தமிழ்மொழியின் மீதும், தமிழினத்தின் மீதும் தொடுக்கப்பட்டுள்ள அடக்குமுறை என்பதைத் தமிழ் கூறும் நல்—உலகிற்கு உணர்த்தவும் தான் புரட்சிகர இளைஞர் முன்னணி மாவட்ட மாநாடு, பேரணி பொதுக் கூட்டம் நடத்தவுள்ளது. "—என அத் தோழமை இயக்கம் அறிவித்திருந்தது" அறிவித்த படி இம் மாநாடு காலை 10 மணியளவில் நகராட்சித் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டில் புரட்சிகர இயக்கத்தைச் சார்ந்தவர்களும், குடிநாயக அமைப்புகளைச் சார்ந்தவர்களும், தமிழறிஞர்களும் பேராசிரியர்களும் கலந்து கொண்டு பேசினர்.

மாலையில் பொதுக் கூட்டம் நடைபெறு வண்ணம் காவல்துறை பொதுக் கூட்டத்தைத் தடைசெய்தது. தமிழக அரசின் அடக்குமுறையைக் காலையில் பேசியதற்கு இலக்கணமாக மாலைப் பொதுக் கூட்டத்தடை அமைந்தது. திரளாக வந்திருந்தோர் அதை உணர்ந்து கலைந்தனர்.

இதே போல் வெங்காலூரில் 16-5-93 அன்று மாலை 3 மணியளவில் வெங்காலூர் தமிழ்ச்சங்கத்தில் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. தமிழன்பர்கள் குழுமியிருந்த அம் மாநட்டில் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. O

சிந்தனைக்கு-19

ஒரு கட்சித் தலைவர் ஆட்சித் தலைவராக உயரும் பொழுது, கட்சிப் பார்வை அவருக்கு அறவே கூடாது; இல்லெனில் நல்ல ஆட்சியை அவரால் தர முடியாது.

தமிழ்நிலம்
5, அருணாச்சலத் தெரு, சென்னை-5

பெறுநர்

நூல்-அஞ்சல்

TN/MS (C)657

Scanned with CamScanner